# இலங்கை ஆசிரியர் சேவையின் தேசிய பாடசாலை ஆசிரியர்களது வருடாந்த / கட்டாய இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்களை கோரல் – 2024

**Tamil Translation**

## நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்ளல்

**ஆலோசனைக் கையேடு (பாடசாலை அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துவதற்காக)**

- 2024 வருடத்திற்காக கல்வி அமைச்சினால் தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளதுடன் **நிகழ்நிலை முறைமை மூலமாக மாத்திரம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.**
- விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் https://nemis.moe.gov.lk எனும் இணைப்பினூடாக தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினுள் (nemis) தங்களது ஆள் அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி பிரவேசித்து, அதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- தமது தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை எனின் அல்லது ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கருதின், தாங்கள் சேவையாற்றும் பாடசாலை உரித்தாகும் வலயக் கல்வி அலுவலகத்தின் **nemis ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை சந்தித்து உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கக்கூடிய காலப் பகுதி 2024.04.25 ம் திகதி முதல் 2024.05.16 திகதி வரையாகும்.**

1. விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முன்னர் https://nstt.moe.gov.lk எனும் இணைப்பினூடாக பிரவேசித்து தங்களது மொழி மூலத்தை சரியாக தெரிவு செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், திரையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆலோசனைகளை சரியாக வாசித்து புரிந்துகொள்ள வேண்டும். (இந்த ஆலோசனைக் கையேட்டினை தங்களது அதிபருக்கும் அனுப்பி வைக்கவும்.)
2. வேறு எந்தவொரு மாதிரிப் படிவங்களைப் பயன்படுத்தி முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு கோரிக்கைகளும் இடமாற்றச் செயன்முறையின் போது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
3. குறித்த விண்ணப்பப் படிவத்தின் இல. 01 முதல் 26 வரையான பகுதிகளுக்கு உரியதான தகவல்களை ஆலோசனைக் கையேட்டின் பிரகாரம் பூரணப்படுத்த வேண்டும். Submit செய்த பிறகு திருத்தங்கள் செய்ய முடியாது என்பதால் Submit செய்வதற்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4. இறுதியில் விண்ணப்பப் படிவத்தை submit செய்ததன் பின்னர், விண்ணப்பப் படிவத்தின் பிரதியை பதிவிறக்கம் செய்து அதனை அச்சிட்டுக் கொள்ளவேண்டும். குறித்த அச்சுப் பிரதியில் தங்களது கையொப்பம் மற்றும் திகதியை இட்டு அதிபரிடம் **2024.05.17** ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளிக்க வேண்டும்.
5. இவ்வாறாக விண்ணப்பப் படிவத்தை கையளிக்கும் போது இடமாற்ற விண்ணப்பப் படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் இணைத்து அதிபரிடம் கையளிக்க வேண்டும்.

   i. முதல் நியமனக் கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

   ii. இறுதியாக தங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

   iii. நேரசூசியின் அதிபரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

   iv. நியமனப் பாடமல்லாத பாடம் ஒன்றை கற்பிப்பவராயின், அதற்காக காணப்படும் ஆகக் கூடிய தகைமைக்குரிய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி.

   v. மருத்துவ ரீதியான விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனின் TTB/2024/05 படிவம்

6. மாகாண அரச சேவைக்கு விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள், மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக இடமாற்ற சபையின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அறியத்தரப்படும்.
7. மருத்துவ ரீதியான விபரங்களை சமர்ப்பிக்கவேண்டிய தேவை காணப்படும் பட்சத்தில் மருத்துவச் சான்றிதழை TTB/2024/05 எனும் படிவத்தினூடாக அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் வைத்தியசாலை ஒன்றில் நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் விசேட வைத்தியரூடாக சமர்ப்பிக்க வேண்டும். (மருந்துத்

துண்டுகள் அல்லது க்ளினிக் குறிப்புக்கள் மற்றும் பல்வேறு மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் எவையும் மருத்துவச் சான்றிதழ்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை விண்ணப்பதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.)

8. **மேலே 5 இன் கீழ் அனுப்பிவைக்கப்படும் ஆவணங்கள் தவிர்ந்து வேறு எந்தவொரு வெளித் தரப்பினரால் வழங்கப்படும் பரிந்துரைக் கடிதங்கள், பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பான கடிதங்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கின்றேன்.**
9. **விண்ணப்பப் படிவத்தை கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்ததன் பின்னர் எந்தவொரு இணைப்பும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. மேலதிக கடிதங்கள் மற்றும் ஆவணங்களை கல்வி அமைச்சிற்கு அடிக்கடி சமர்ப்பிப்பதிலிருந்து ஆசிரியர்கள் தவிர்ந்துகொள்ள வேண்டும்.**

- ❖ தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப் படிவங்களை சரியாக பூரணப்படுத்துதல் மற்றும் அதன் அச்சுப் பிரதியில் 2024.05.17 திகதிக்கு முன்னர் தங்களது கையொப்பம் மற்றும் திகதியைக் குறிப்பிட்டு அதிபரிடம் கையளிப்பது ஆசிரியர்களது பொறுப்பாகும்.
- ❖ அவ்வாறாக கையளிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக அதிபர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிபரது பரிந்துரையை நிகழ்நிலை மூலமாக வழங்குவதற்கும், அதிபரது பரிந்துரையுடன் கூடிய பகுதியின் அச்சுப் பிரதியில் அதிபர் தனது கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை மற்றும் திகதியை தெளிவாக குறிப்பிட்டு உரிய ஆவணங்களையும் இணைத்து 2024.05.28ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் ஆசிரியர் இடமாற்றக் கிளைக்கு கொண்டு வந்து சமர்ப்பிப்பது அதிபரது பொறுப்பாகும். இதன் போது இவ் விண்ணப்பப் படிவங்களை ஒரு தனிக் கோவையாக அதிபர் அல்லது அதிபரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதி/ உதவி அதிபர் கையளிக்க வேண்டும்.
- ❖ இச் செயன்முறைக்கு மாற்றமாக எந்தவொரு விண்ணப்பப் படிவமும் 2024 வருடாந்த/ கட்டாய இடமாற்ற சபையில் முன்னிலைப்படுத்தப்பட மாட்டாது. தபால் மூலமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் யாவும் எந்தவொரு காரணமும் தெரிவிக்காமல் நிராகரிக்கப்படும்.
- ❖ நிகழ்நிலை முறைமையூடாக விண்ணப்பித்தல், விண்ணப்பப் படிவத்தை அச்சிடல், அதிபர் நிகழ்நிலை மூலமாக பரிந்துரை வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் போது ஏற்படக்கூடிய தொழில்நுட்பம் சார் பிரச்சனைகள் தொடர்பாக 011- 2075854 (தரவு முகாமைத்துவக் கிளை) எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக கடமை நேரத்தில் தொடர்புகொண்டு விசாரிக்க முடியும்.
- ❖ ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் 011-2784434 (ஆசிரியர் இடமாற்றக் கிளை) எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக கடமை நேரத்தில் தொடர்புகொண்டு விசாரிக்க முடியும்.

ஜே.எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்
கல்வி அமைச்சு